கழுகுமலை தேர்வு நிலைப் பேரூராட்சி செயல் அலுவலர் செயல்முறைகள்

முன்னிலை : திரு. இரா.குணாளன்

ந.க.எண். 51/2018 நாள்: 12.06.2018

பொருள் மனை வரன்முறை – பேரூராட்சிகள் நிர்வாகம் – தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி வட்டம் – கழுகுமலை பேரூராட்சி மற்றும் கிராமம் – சர்வே எண் 142/5 , 6 ,143/4 மற்றும் 5 இல் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள மனைகளை வரன்முறைப்படுத்திடல் கொள்கை அளவில் ஒப்புதல் பெறப்பட்டது – வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக

பார்வை 1. அரசாணை நிலை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04/05/2017
2.அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 13.10.2017
3. திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 262/2018/திலிம3 நாள் 16.02.2018
4. திரு. வி.அய்யப்பசாமி, 7, வடக்குத் தெரு, குமாரபுரம், கழுகுமலை விண்ணப்பம் நாள் 04.04.2018
5. தொடர்புடைய ஆவணங்கள்

-----

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கழுகுமலை பேரூராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் 142/5, 6 , 143/4 மற்றும் 5ல் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு எண் **ம.வ(மு)/ம.(திலி) எண்.37/2018** என எண்ணிடப்பட்டு பார்வை 3–இல் கண்டபடி வரன்முறைப்படுத்திட திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களால் 16.02.2018 அன்று கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது, மேற்கண்ட மனைப்பிரிவில் மனை எண்கள் 5 முதல் 59 மற்றும் 1 கடையினை மட்டும் முறைப்படுத்திட இணைப்பில் கண்டவாறு உள்ள பிளாட் அளவுகளுக்கு உரிய கட்டணங்கள் Online இல் மனுதாரர் மூலம் செலுத்தப்பட்டு அத்தாட்சி பெறப்பட்டுள்ளது.

| விண்ணப்பம் எண் மற்றும் நாள் | மனை எண்கள் | மொத்த மனைகள் | E Payment மூலம் செலுத்தப்பட்ட கட்டணங்கள் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கூராய்வு கட்டணம் | Transaction No. | வரன்முறை கட்டணம் | வளர்ச்சிக் கட்டணம் | மொத்தம் | Transaction No. |
| DTCP/L/0044703 / 2017 Dated 13/01/2018 | 47,48 | 2 | 1000 | LHMP 5966467400 | 7357.80 | 18394.50 | 25752.30 | LTMB 6136013888 |
| DTCP/L/0064238 / 2017 Dated 19/03/2018 | 45, 5 to 44, 46,49 to 59, Shop | 54 | 27000 | LUTI 6145329660 | 3678.90 | 9197.50 | 12876.15 | LUTI 6196579856 |
| | | | | | 188664.00 | 471660.00 | 660324.00 | LUTI 6196654501 |
| | மொத்தம் | 56 | 28000 | - | 199700.70 | 499252 | 698952.45 | - |

V. Ayyappasamy

மேற்படி கட்டணங்கள் பிளாட்டுகளுக்கு தகுந்தவாறு செலுத்தப்பட்டுள்ளதால், பார்வை 2 இல் காணும் அரசாணை மற்றும் பார்வை 3 இல் காணும் திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கழுகுமலை பேரூராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் 142/5, 6 , 143/4 மற்றும் 5ல் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் அமைந்துள்ள 56 மனைகள் (1 கடை உட்பட) வரன்முறைப்படுத்தி பத்திரப்பதிவு செய்வதற்காக இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

பார்வை 1 மற்றும் 2 இல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் பார்வை 3 இல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் இவ்வாணைக்கு பொருந்தும்.

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி
கழுகுமலை – 628552

12/06/18

இணைப்பு :

Registration Slip & Acknowledgement Slip

பெறுநர்

திரு. வி.அய்யப்பசாமி,
7, வடக்குத் தெரு,
குமாரபுரம்,
கழுகுமலை

நகல்

1. துணை இயக்குநர் அவர்கள், நகர் ஊரமைப்பு துறை, திருநெல்வேலி
2. சார்பதிவாளர் அவர்கள், கழுகுமலை
3. உதவி இயக்குநர் அவர்கள், பேரூராட்சிகள், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி

அனுப்புநர்
திரு ஞா. நாகராஜன், B.E., AITP., MBA., B.G.L.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
திருநெல்வேலி மண்டலம்,
தெற்கு புறவழிச்சாலை,
திருநெல்வேலி - 5
Web site : www.tn.gov.in/tcp
Email ID : ddtcptnv@gmail.com

பெறுநர்
செயல் அலுவலர்
கழுகுமலை பேரூராட்சி
தூத்துக்குடி மாவட்டம்

ந.க. எண் 262/2018 திலிம3, நாள் 16.02.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049, மாசி 4

அய்யா,

**பொருள் :** அனுமதியற்ற மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - திருநெல்வேலி மண்டலம் - தூத்துக்குடி மாவட்டம் - கோவில்பட்டி வட்டம் - கழுகுமலை பேரூராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண் 142/5, 6, 143/4 மற்றும் 5-ல் அமையும் அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை :**
1. மனுதாரர் திரு வி. அய்யப்பசாமி என்பவரது விண்ணப்பம் நாள் 22.01.2018
2. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
3. அரசாணை எண். 172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 13.10.2017
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.13193/17 எல் ஏ 2, நாள்.30.10.17, 31.10.2017, 03.11.2017 மற்றும் 07.11.2017

-----

பார்வை 1-ல் கண்டுள்ள மனுதாரர் கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டம் , கோவில்பட்டி வட்டம், கழுகுமலை பேரூராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண் 142/5, 6, 143/4 மற்றும் 5-ல் அமைந்துள்ள 11250.00 சமீ பரப்பளவு கொண்ட அனுமதியற்ற மனைப்பிரிவினை முறைப்படுத்திட விண்ணப்பம் பெறப்பட்டு, பார்வை 2 மற்றும் 3-ல் கண்டுள்ள அரசாணைகளின் படி பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விபரங்களுடன் தயார் செய்யப்பட்ட Layout Frame Work-க்கு **ம.வ (மு)/ம.(திலி) எண்.37/2018** என எண்ணிடப்பட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்புதலளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | - 11250.00 சமீ |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | - 59 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - 4 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் எண்ணிக்கை | - 55 |
| விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பு | - 6570.89 சமீ |

V. Ayyabbasamy

| விற்பனை செய்யப்படாத மனை எண்கள் | பொது ஒதுக்கீடு (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்புளவில் 10% ) |
|---|---|
| 5 முதல் 59 வரை | பூங்கா 1 பரப்பு - 95.27 சமீ<br>பூங்கா 2 பரப்பு - 580.41 சமீ<br>மொத்த பூங்கா பரப்பு - 675.68 (10.28%) |

**மனைப்பிரிவில் அமையும் தனித்த மனைகளை வரன்முறைபடுத்திட பார்வை 2 மற்றும் 3-இல் கண்டுள்ள அரசாணைகளின் படி, உள்ளாட்சியால் கீழ்கண்டவாறு கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.**

1. மனைகளுக்கு கூராய்வு கட்டணம் www.tnlayoutreg.in என்ற இணையதளத்தில் மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் செலுத்தப்பட்ட இரசீதினை பெற்றுக் கொண்டு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.
2. வரன்முறைக்கட்டணமாக அந்தந்த மனைகளுக்கான பரப்பளவில் சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் கீழ்கண்ட அரசு கணக்கு தலைப்பு கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
   **வரன்முறை கட்டணம் செலுத்துவதற்கான - அரசு கணக்கு தலைப்பு**
   0217-Urban Development
   60- Other Urban Development Schemes –
   800 Other Receipts -
   AT Receipt under Regularisation Charges of Unapproved Layout and plots – DTCP
   (D.P. Code : 0217-60-800-AT-0007)
3. வளர்ச்சிக் கட்டணமாக (Development Charges) அந்தந்த மனைகளுக்கான பரப்பளவில் சதுர மீட்டருக்கு ரூ.75/- வீதம் மனுதாரரிடமிருந்து வசூல் செய்து தனிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு அரசாணைகளில் தெரிவித்துள்ளவாறு பராமரிக்கப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணைகளின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்துகொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம். நில உரிமை குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
2. இவ்வரன்முறைப்படுத்தப்படும் மனைப்பிரிவிலுள்ள மனைகள் மட்டுமே வரன்முறைபடுத்த இசைவு அளிக்கப்படுகிறது. மனையில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு தனியாக கட்டிட அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட Layout Frame Work வரைபடம் உரிய நடவடிக்கை தொடரும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மனைப்பிரிவு வரைபடம் மற்றும் கடிதம் பெற்றுக் கொண்டமைக்கு இவ்வலுவலகத்திற்கு ஒப்புகை சான்று அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
திருநெல்வேலி - 5

**இணைப்பு**
மனைப்பிரிவு Frame work வரைபடம் - 2

**நகல்**

1. திரு வி. அய்யப்பசாமி, 7 வடக்கு தெரு, குமாரபுரம், கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம் (கடிதம் மட்டும்)

2. சார்பதிவாளர், கழுகுமலை, தூத்துக்குடி மாவட்டம் (வரைபடம் இணைப்புடன்) (மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதிகளை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.)

3. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவுருக்கள் துறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தூத்துக்குடி (வரைபடம் இணைப்புடன்) (மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு பகுதிகளை வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சி பெயரில் உட்பிரிவு செய்யும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகிறது.)

4. தொழில் நுட்ப வைப்பறை (கடிதம் மற்றும் வரைபடம்)

V. Ayyappasamy.